செ.வெ.எண்:02 நாள்:02.04.2019

## நாகப்பட்டினம் மாவட்டம்

## பாராளுமன்றத் தேர்தல்-2019 – நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பதற்றமான வாக்குச்சாவடி மையங்களை 29.நாகப்பட்டினம் பாராளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் பார்வையாளர் திரு.சி.பி.நேமா,இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பாராளுமன்றத் தேர்தல்-2019-ஐ முன்னிட்டு, நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மஞ்சக்கொல்லை குமரன் உயர்நிலைப்பள்ளி, ஐவநல்லூர் கமலா உதவிபெறும் தொடக்கப்பள்ளி, நாகப்பட்டினம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கோட்டைமேட்டுத் தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி, புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, காளியம்மன் கோவில் தெரு நகராட்சி தொடக்கப்பள்ளி, நாகூர் கௌதியா மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் அமைந்துள்ள பதற்றமான வாக்குச்சாவடி மையங்களை 29.நாகப்பட்டினம் பாராளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் பார்வையாளர் திரு.சி.பி.நேமா,இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.ஏ.கே.கமல்கிஷோர்,இ.ஆ.ப, நாகப்பட்டினம் வட்டாட்சியர் திரு.சங்கர், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் திரு.என்.ஆர்.ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.செபஸ்டியம்மாள், திரு.வெற்றிச்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**நாகப்பட்டினம்.**